புதுச்சேரி அரசு

குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை

எண்:3407/DCS&CA/Squad/2018 தேதி : 10.5.2018

<u>செய்தி குறிப்பு</u>

புதுச்சேரியில் வழங்கப்பட்டுள்ள குடும்ப உணவு பங்கீட்டு அட்டைகளில் இடம் பெற்றுள்ள ஒரு சில உறுப்பினர்கள் புதுச்சேரியில் வசிக்கவில்லை என குடிமைப்பொருள் வழங்கல் துறையால் கருதப்படுகிறது. இந்த நபர்களின் விபரம் பட்டியலிடப்பட்டு பொது மக்களின் பார்வைக்கு சம்பந்தப்பட்ட நியாய விலை கடையின் அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. மேலும் துறையின் <dcsca.puducherry.gov.in> என்ற இணைய தள முகவரியிலும் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறான உறுப்பினர்களின் பெயரை குடும்ப அட்டையிலிருந்து நீக்க முடிவு செய்யப்பட்டு குடும்ப தலைவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின், 31.05.2018 தேதிக்குள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் புதுச்சேரியில் வசிப்பதற்கான ஆதாரங்களை, குடிமைப்பொருள் வழங்கல் துறையில் சமர்ப்பிக்கும்படியும், தவறும் பட்சத்தில் அந்த நபர்களின் பெயர்கள் குடும்ப அட்டையிலிருந்து நிரந்தரமாக நீக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

இ. வல்லவன்

(இ.வல்லவன்)

இயக்குநர்